நிர்வாக இயக்குநர் அலுவலகம்
24 AUG 2010
சேப்பாக்கம், சென்னை-5

<u>சுருக்கம்</u>

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா— காஞ்சிபுரம் மாவட்டம்— மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் — அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் காஞ்சிபுரம் நகராட்சி மற்றும் செவிலிமேடு பேரூராட்சியால் மேற்கொள்ளப்பட வேண்டிய சிறப்புப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு — ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4) துறை

அரசாணை (நிலை) எண்: 177 நாள் : 20.08.2010

படிக்கப்பட்டது:

1. அரசு ஆணை ( நிலை) எண்.233, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 5.12.2009.
2. நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட செயற்குறிப்பு ந.க. எண். 49188/ 2009/ப்பி3, நாள் 9.1.2010.
3. பேரூராட்சிகளின் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.21316/ 2009/ 23, நாள் 7.05.2010.

<u>ஆணை:</u>

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாவில் "காஞ்சிபுரத்தில் அரசு சிறப்பு நிதி ஒதுக்கீடு மூலம் சில வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்" என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பினை வெளியிட்டிருந்தார். அவ்வறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் காஞ்சிபுரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய 17 வளர்ச்சிப் பணிகளை சம்பந்தப்பட்ட அனைத்து துறைகளும் ரூ.1715.00 இலட்சம் செலவில் அரசு சிறப்பு நிதியின் கீழ் மேற்கொள்வதற்கான ஒட்டுமொத்த நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணை (நிலை) எண்.233, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 5.12.2009—ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், இவ்வரசாணையில், இப்பணிகளுக்கான விரிவான மதிப்பீடுகளை (Detailed Estimate) அந்தந்த துறைத் தலைவர்களிடமிருந்து பெற்று சம்பந்தப்பட்ட அரசு துறைகள் ஆய்வு செய்து நிதித் துறையின் இசைவுடன் குறிப்பான நிர்வாக ஒப்புதலினைப் பெற்று ஆணை வெளியிட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2. மேற்சொன்ன அரசாணையில் ஒட்டுமொத்த நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள 17 பணிகளில் செவிலிமேடு பேரூராட்சிப் பகுதியில் செவிலிமேடு பேரூராட்சியால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் கீழ்க்கண்டவாறு உள்ளன:-

(i) ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் பல்லவன் நகர் பூங்காவினை அபிவிருத்தி செய்தல்.

(ii) ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் கன்னிகாபுரத்தில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல்.

(iii) ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் காமராஜர் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல்.

(iv) ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் செவிலிமேடு பேரூராட்சிப் பகுதியில் இரண்டு இடங்களில் உயர்கோபுர மின்விளக்குகள் அமைத்தல்.

(v) ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பதி குளம் சாலையில் மழைநீர் வடிகால் கட்டுதல்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் மேலே பத்தி 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை உடனடியாக துவக்கி முடிக்கப்படவேண்டுமென அரசாணையில் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பணிகள் துரிதமாக நடைபெற்று முடிவடையும் தருவாயில் உள்ளது என்றும், இப்பணிகளுக்கான, தொகையினை உடன் வழங்க வேண்டி உள்ளதால் 2010-2011ம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ.102.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, தொகையினை விடுவித்து உரிய ஆணை வழங்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. இதேபோன்று காஞ்சிபுரம் நகராட்சியால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு உள்ளன:-

(1) ரூ.21.00 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் நகரில் திருவெங்கடம்பன் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல்.

(2) ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் சங்குசாபேட் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல்.

(3) ரூ.20.00 லட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் நகராட்சிப் பகுதியின் பல்வேறு இடங்களில் நவீன குப்பைத் தொட்டி அமைத்தல்.

(4) ரூ.250.00 இலட்சம் மதிப்பீட்டில் கச்சபேஸ்வரர் கோயிலுக்கு சொந்தமான இடத்தில் பூங்கா அமைத்து பராமரித்தல்.

5. நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் மேலே பத்தி 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு ரூ.311.00 இலட்சம் நிதியினை வழங்குமாறு அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

6. நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோரின் செயற்குறிப்புகளை, அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வின் முடிவில் பேரூராட்சிகளின் இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்று பத்தி 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை செய்து முடிக்க ரூ.102.00 இலட்சம் (ரூபாய் நூற்றியிரண்டு இலட்சம் மட்டும்) செவிலிமேடு பேரூராட்சிக்கும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்று பத்தி 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை செய்து முடிக்க ரூ.311.00 இலட்சம் (ரூபாய் முன்னூற்று பதினொன்று இலட்சம் மட்டும்) காஞ்சிபுரம் நகராட்சிக்கும் அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

7. மேலே பத்தி 6-ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் கீழ்கண்ட கணக்குத் தலைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

<u>செவிலிமேடு பேரூராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட ரூபாய் 1.02 கோடி</u>

"2515 00. ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 800. ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II. மாநில திட்டம் – KJ அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டிற்காக பேரூராட்சிகளுக்கு நிதியுதவி – 09. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (த.தொ.கு 2515 00 800 KJ 0909)"

<u>காஞ்சிபுரம் நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட ரூபாய் 3.11 கோடி</u>

"2217 நகர்ப் பகுதி வளர்ச்சி – 05 ஏனைய நகர்ப் பகுதி வளர்ச்சித் திட்டங்கள் – 192 நகராட்சிகள், நகராட்சி மன்றங்கள் முதலியவற்றிற்கு நிதி உதவி – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II. மாநில திட்டம் – JA அடிப்படை வசதிகளை மேம்படுத்த நகராட்சிகளுக்கு நிதி உதவி – 09 உதவித்தொகை –03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (த.தொ.கு 2217 05 192 JA 0935)"

8. மேலே பத்தி 6-ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் "புதுப்பணி" குறித்த செலவினமாகும். சட்டப்பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். முதற்கண் செலவினம் மேற்கொள்ள தேவையான முன்பணம் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து அனுமதிக்கப்படும். முன்பணம் கோரி உரிய படிவத்தில் நிதி (வ.செ.பொது.II) துறைக்கு விண்ணப்பிக்கும்படி பேரூராட்சிகளின் இயக்குநர் / நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். இச்செலவினத்தை சட்டமன்றப் பேரவையின் தனி கவனத்திற்கு கொண்டுவரும் பொருட்டு 2010–2011–ஆம் ஆண்டு துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்படுவதற்குரிய கருத்துருவை நிதி (வ.செ.பொது.II) துறைக்கு அனுப்பி

வைக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர்/ நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்குறிப்பிட்ட கணக்குகளில் தொகையினை பெற்று செவிலிமேடு பேரூராட்சி / காஞ்சிபுரம் நகராட்சிக்கு வழங்க முறையே பேரூராட்சிகளின் இயக்குநர் / நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு இவ்வரசாணையின் மூலம் அதிகாரமளிக்கப்படுகிறது.

9. இவ்வாணை நிதித்துறையின் 17.8.2010 நாளிட்ட அலுவல் சார்பற்ற எண். 45444/நதி(ம)கு.வ/2010-ல் பெறப்பட்ட ஒப்புதலுடனும் மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேற்றேட்டு எண். 719 (எழுநூற்று பத்தொன்பது) உடனும் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

க. அஷோக் வர்தன் ஷெட்டி.
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-600 005.
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை-600 108.
மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் மாவட்டம்.
நகராட்சி ஆணையர், காஞ்சிபுரம் நகராட்சி, காஞ்சிபுரம்.
செயல் அலுவலர், செவிலிமேடு பேரூராட்சி.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர் / கருவூலக அலுவலர்.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலர், சென்னை-600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை- 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை- 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை-600 009.
மாநில கணக்காயர், சென்னை-18/சென்னை-600 035.
உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநர், சென்னை-600 108.
நிதித் துறை (நதி (ம) கு.வ) / (வ.செ.பொது.1) / (வ.செ.பொது.2), சென்னை-600 009.
இ.கோ/ உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.